---

## 1. நிதிக்கூற்றுக்கள்
### 1.1 அபிப்பிராயம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள்

பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 11 ஆவது பிரிவு மற்றும் 2019 யூலை 29 ஆம் திகதிய இலக்கம் 04/2019 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக் கணக்காய்வு சுற்றறிக்கை கடிதம் | உரிய அமைச்சரினதும் நிதியமைச்சரினதும் அங்கீகாரம் இன்றி 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 1,459,690 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 8(1) (d) பிரிவின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஊழியர் அபிவிருத்தி நிதியத்திற்குரிய பணம் நிலையான வைப்பாக பேணிச் செல்லப்பட்டது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் 5 ஆவது அத்தியாயத்தில் 07 ஆம் பிரிவு மற்றும் 2018 திசெம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 2/2018 என்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | 22 பல்கலைக் கழகங்களில் கல்விசார் மற்றும் கல்விசாரா பதவி அணியினரில் 551 பேர்களில் பிணை முறிகளை மீறியதன் அடிப்படையில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,262 மில்லியன் அறவிடவேண்டிக் காணப்பட்டது. | பிணை முறியை மீறியிருந்தமை இணங்காணப்பட்டமை 347 பேர்களின் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதில் 139 பேர்கள் தற்போது செலுத்தும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். எஞ்சிய 204 பேர்களின் பணத்தை அறவிடுவதில் காணப்படுகினன்ற சட்ட விதிகளின் கீழ் மேற்கொள்ள முடியாமையினால் அதற்காக தேவையான பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் பிணை முறிகளை மீறிய உத்தியோகத்தர் களிடம் இருந்து அறவிட வேண்டிய பணத்தை விரைவாக அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 49.88 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 282.6 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 232.72 மில்லியன் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீண்டெழும் மானியம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுப் பெறுமதி ரூபா 2,647,969 ஆன நானாவித இருப்புக்கள் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையிலான காலத்தில் இருந்து களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | COVID பரவியமையால் அதிக காலம் நிறுவனம் மூடப்பட்டு இருந்தமை மற்றும் இலத்திரனியல் ஊடாகம் மூலம் வேலை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அதிக அளவில் ஏற்பட்டமையினால் எஞ்சியிருந்த இந்த இருப்பு விடயங்களில் அயலுமான அளவை பல்கலைக்கழகத்திற்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவைகளை சரியாக இனங்கண்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஆண் பெண் சமநிலை / நியாயத்தன்மை தொடர்பான துறைகளுக்கு 2020 முதல் 2022 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளை பூர்த்தி செய்யும் செயல் முன்னேற்றம் 23.5 சதவீதம் முதல் 36.6 சதவீதம் ஆன குறைந்த வீச்சில் காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் ஒக்டோபர் 31 ஆந் திகதி வரை கிடைக்கப்பெற்ற 68 முறைப்பாடுகளில் முறைப்பாடுகளை தீர்த்து வைக்கும் செயல் முன்னேற்றம் 14.7 சதவீதம் ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக 14 நாட்களுக்குள் விசாரணை செய்து அறிக்கை வழங்குமாறு உரிய பல்கலைக்கழகத்தின் உப வேந்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இறுதியாக மாணவர்கள் மற்றும் பதவியணியினர் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் தொடர்பான இறுதி அதிகார தரப்பினருக்கு உரிய பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் அது தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பணிப்பொறுப்பு வரையறுக்கப்பட்டிருந்தது. | கிடைக்கின்ற முறைப்பாடுகளை பரீட்சித்து பூர்த்தி செய்து நடவடிக்கைகளை எடுத்தலை விரைவுபடுத்துவதற்காக செயற்திறனான திட்ட முறைமையொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (இ) | ஆணைக் குழுவினால் 2017 ஆம் ஆண்டின் போது மாதாந்த வாடகை ரூபா 350,000 தொகையில் பெறப்பட்டிருந்த 3,337 சதுர அடி அளவினை உடைய கட்டிடத்தின் இட அளவு போதாமை மற்றும் போக்குவரத்து வசதியீனம் காணப்பட்டமையின் அடிப்படையில் அந்த குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு 7,000 சதுர அடியை உடைய கட்டிடம் ஒன்று ரூபா 950,000 மாதாந்த வாடகையில் பெற்றுக் கொள்வதற்காக தேசிய வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் 2020 நவம்பர் 09 ஆந் திகதி கிடைத்திருந்தது. எனினும் அந்த அங்கீகாரத்திற்கு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எதிர்பார்த்த 2017 ஆம் ஆண்டின் வாடகையை அடிப்படையாக கொண்டு கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வுப் பிரிவு தர நிர்ணய சபை மற்றும் பல்கலைக்கழக முறைப்பாட்டு செயற்பாட்டுச் சேவை பதவியணியினர் பிரிவுகள் புதிய கட்டிடத்திற்கு கொண்டு செல்வதற்கு புதிய கட்டிடத்தில் இடவசதிகள் போதுமானதாக இருக்கவில்லை. இது தொடர்பாக நீண்ட ரீதியில் ஆய்வு செய்து 2017 ஆம் ஆண்டின் போது வாடகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டிடமும் தொடர்ந்தும் வாடகை அடிப்படையில் | அரசாங்கத்திற்கு மிகவும் நலன் வாய்ந்த பொருளாதார ரீதியில் சிக்கனமான ரீதியில் தீர்மானம் எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முரணாக மாதாந்த வாடகை ரூபா 350,000 ஆன வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்படாமல் புதிய கட்டிடம் வாடகை அடிப்படையில் பெறப்பட்டதன் காரணமாக 2021 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்தும் அந்த கட்டிடத்திற்காக 2024 மார்ச் வரையும் கூட்டு மொத்தமாக ரூபா 12,600,000 கட்டிட வாடகையாக செலுத்தப்பட்டிருந்தது. | பேணிச் செல்வதற்காக பொதுத்துறை திறைசேரியின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020/2021 மற்றும் 2021/2022 கல்வி ஆண்டு இரண்டிற்காக பல்கலைகழகங்களுக்கு மாணவர்கள் சேர்க்கப்பட்ட பின்னர் மேலும் முறையே 1857 மற்றும் 1084 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அந்த வெற்றிடங்களுக்காக புதிய மாணவர்களை உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக அந்த இரண்டு கல்வி ஆண்டுகளின் போது மாத்திரம் 2941 மாணவர்களுக்கு பல்கலைக்கழக நுழைவு இழக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெற்றிடங்களுக்காக மாணவர்கள் நியமிக்கப்பட்ட போதும் அந்த மாணவர்கள் நுழைவினை கையேற்காமையின் அடிப்படையில் வெற்றிடமாக காணப்படுகின்றது. | வெற்றிட அளவினை குறைத்து ஆகக் கூடிய அளவில் மாணவர்களுக்கு பல்கலைக்கழக நுழைவு சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2009 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை பட்டபின் படிப்பு மானியம் பெற்ற 22 நலனாளிகளுக்கு 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பாடநெறிகளை பூர்த்திசெய்யாதிருந்ததுடன் | பட்டபின் படிப்பு மானியம் பெற்ற 22 நலனாளிகளின் 11 பேர்களின் பணம் அறவிடப்பட்டுள்ளதுடன் 03 பேர்களின் பணம் அரைவாசி அறவிடப்பட்டுள்ளது. | பாடநெறிகளை பூர்த்தி செய்யாத மானியம் பெற்ற நலனாளிகளிடம் இருந்து பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அவர்களில் 11 பேருக்கு வழங்கப்பட்ட மானியங்களில் ரூபா 17,498,461 தொகை 2023 திசெம்பர் 31 வரை அறவிட வேண்டியிருந்தது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் பட்டபின் படிப்பு மானியம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஏனையவர்கள் தொடர்பாக உரிய பல்கலைகழகத்திற்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.<br><br>காணப்படுகின்ற அரச நிதி சட்ட பிரமாணங்களின் பிரகாரம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது பட்டபின் படிப்பு மானியம் வழங்கப்படவில்லை. | எடுத்தல் வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது மென்பொருள் அபிவிருத்திக்காக ரூபா 1,148,000 செலவிடப்பட்டிருந்த போதிலும் உரிய பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது பரவலடைந்த கொவிட் தொற்று நோயின் காரணமாக அடிப்படை முகாமைத்துவ தகவல்கள் சேகரிப்பதற்கான மென்பொருள் முறைமையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் தாமதம் அடைந்திருந்தன. தற்போது அந்த மென்பொருளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் உள்ளது. | உரிய பணிகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |